பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 10 2024 **THURSDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்திய – பசிபிக் மண்டலத்தில் நிலவும் சூழல் குறித்து விரிவாக விவாதிக்கும் வாய்ப்பினை கிழக்காசிய உச்சி மாநாடு ஏற்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- டாடா குழும முன்னாள் தலைவர் ரத்தன் டாடா-வின் இறுதிச்சடங்கில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பங்கேற்பார் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- அரசு சேவைகள் மக்களுக்கு தடையில்லாமல் கிடைக்கும் வகையில், **Dijilocker**–ருடன் **Umang** செயலி ஒருங்கிணைக்கப்படும் என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அறிவித்துள்ளது.
- தமிழக அரசின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் **C** மற்றும் **D** பிரிவு பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் வரை போனஸ் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- ஆர்க்டிக் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் கிரண் ஜார்ஜ், லக்ஷயா சென் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

ஆசியான் உச்சி மாநாடு மற்றும் கிழக்காசிய உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று லாவோஸ் புறப்பட்டுச் சென்றார்.

லாவோஸ் பயணத்திற்கு முன்பாக பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில், லாவோஸ் பிரதமர் திரு. **Sonexay Siphandone** அழைப்பின் பேரில், உச்சி மாநாட்டில் தாம் பங்கேற்பதாக தெரிவித்துள்ளார்.

ஆசியான் உறுப்பு நாடுகளுடனான இந்தியாவின் ஒத்துழைப்பு குறித்தும் அதன் எதிர்கால பயணம் குறித்தும் உறுப்பு நாடுகளின் தலைவர்களுடன் தாம் விவாதிக்கவிருப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

இந்திய – பசிபிக் மண்டலத்தில் அமைதி, நிலைத்தன்மை மற்றும் வளத்தை பெருக்குவதில் உள்ள சவால்கள் குறித்து விரிவாக விவாதிக்கும் வாய்ப்பினை கிழக்காசிய உச்சி மாநாடு உருவாக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

லாவோஸ் உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளுடன் நெருக்கமான கலாச்சார உறவை இந்தியா கொண்டுள்ளதாக பிரதமர் கூறியுள்ளார்.

ஆசியான் நாடுகளுடனான இந்தியாவின் உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் தமது பயணம் அமையும் என்று பிரதமர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்காசிய உச்சி மாநாடு இன்றும் நாளையும் **Vientiane-**ல் நடைபெறுகிறது.

**>>>>><<<<<**

மும்பையில் நேற்று இரவு காலமான டாடா குழும முன்னாள் தலைவர் ரத்தன் டாடா-வின் உடல் மும்பையில் உள்ள தேசிய நிகழ்த்துகலை மையத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அவரது மறைவை ஒட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் தங்களது இரங்கலை தெரிவித்துள்ளனர்.

ரத்தன் டாடா மறைவு குறித்து அவரது சகோதரர் திரு. நோயல் டாடாவுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி பேசினார்.

ரத்தன் டாடாவின் இறுதிச்சடங்கு இன்று மாலை 4.30 மணியளவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் சார்பாக இந்த இறுதிச்சடங்கில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பங்கேற்பார் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ரத்தன் டாடாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மகாராஷ்டிராவில் இன்று ஒருநாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்றும், அவரது இறுதிச் சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் நடைபெறும் என்றும் மகாராஷ்ட்டிர மாநில அரசு தெரித்துள்ளது.

**>>>>><<<<<**

அரசு சேவைகள் மக்களுக்கு தடையில்லாமல் கிடைக்கும் வகையில், **Dijilocker**–ருடன் **Umang** செயலி ஒருங்கிணைக்கப்படும் என்று தேசிய மின்ஆளுமைப் பிரிவு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த ஒருங்கிணைப்பின் மூலமாக ஒரே தளத்தில் பல்வேறு சேவைகளை பயனர்கள் பெற முடியும் என்று தெரிவித்துள்ளது.

முக்கிய ஆவணங்களை **Cloud** அடிப்படையிலான சேமிப்பகம் மூலம் பாதுகாக்கும் நோக்கில் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் **Dijilocker** செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசின் சேவைகளை ஆன்ட்ராய்டு பயனர்கள் பெறும் வகையில், **Umang** செயலி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**>>>>><<<<<**

தேசிய அஞ்சல் தினம் இன்று நாடுமுழுவதும் கொண்டாடப்படுகிறது.

அஞ்சல் சேவைகள் மூலமாக நாடுமுழுவதும் இணைப்பை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் அஞ்சலக பணியாளர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், அவர்களது பங்களிப்பை போற்றும் வகையிலும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இதையொட்டி, அஞ்சல் துறை சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**>>>>><<<<<**

நியாயவிலைக்கடைகளில் செறிவூட்டப்பட்ட இலவச அரிசி வழங்கும் திட்டத்தை 2028ஆம் ஆண்டு வரை மத்திய அரசு நீட்டித்து உத்தரவிட்டிருப்பது பொதுமக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

இத்திட்டம் ஏழை மக்களுக்கு மேலும் பயனுள்ளதாக அமையும் என்று பயனாளி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பயனாளி 29 செகண்ட்ஸ்

**>>>>><<<<<**

தமிழக அரசின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் **C** மற்றும் **D** பிரிவு பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் வரை போனஸ் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், எதிர்வரும் விழாக்காலத்தை பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட வகைசெய்யும் இந்த அறிவிப்பு, இரண்டு லட்சத்து 75 ஆயிரத்து 67 தொழிலாளர்களை சென்றடையும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், பல்வேறு கூட்டுறவு அமைப்புகள், நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கான ஆணைகள் தனியாக வெளியிடப்படும் என்று அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

ராணுவ உயர் அதிகாரிகளின் இரண்டு நாள் மாநாடு, சிக்கிமில் இன்று தொடங்குகிறது.

அம்மாநில தலைநகர் கேங்க்டாக்கில் நடைபெறும் இந்த மாநாட்டில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

தற்போதைய ராணுவ செயல்பாடுகள் எதிர்கால திட்டங்கள், முக்கியமான தருணங்களில் செயலாற்றும் திறன் உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து ராணுவ உயரதிகாரிகள் விவாதிக்கும் வகையில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

எல்லைகளை பாதுகாப்பது மற்றும் சர்வதேச ரீதியிலான சவால்களை எதிர்கொள்வது குறித்தும் முதல்கட்டமாக நடைபெறும் இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

ராணுவ உயரதிகாரிகளின் இரண்டாவது கட்ட மாநாடு புதுதில்லியில் வரும் 28, 29ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.

**>>>>><<<<<**

சென்னை மாநகரில் தூய்மை பணிகள், சாலை பராமரிப்புப் பணிகள், கழிவுநீர் அகற்றல் போன்ற அடிப்படை வசதிகளை மாநில அரசு துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மீண்டும் தூய்மை நகரங்கள் பட்டியலில் சென்னை மாநகராட்சியை முன்னிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூவுடன் நேற்றிரவு தொலைபேசியில் பேசியதாக அமெரிக்க வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அப்போது மேற்காசியாவில் நிலவிவரும் சூழல் குறித்து இருவரும் விவாதித்ததாகவும், லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினர் மீதான இஸ்ரேலின் தாக்குதல் குறித்து திரு. ஜோ பைடன் கேட்டறிந்ததாகவும் அது கூறியுள்ளது.

ஆகஸ்ட் மாதத்திற்குப் பிறகு தற்போது இரு தலைவர்களும் மேற்காசிய சூழல் குறித்து விவாதித்ததாக வெள்ளை மாளிகை குறிப்பிட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கர்நாடகாவின் கடலோரப் பகுதிகள், தெற்கு உள்பகுதி மாவட்டங்களில் உள்ள சில இடங்களில் அடுத்த ஏழு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மேலும், குஜராத், மத்தியப்பிரதேசம், உத்தரபிரதேசம், பீகார், மகாராஷ்ட்ராவின் சில பகுதிகளில் தென்மேற்கு பருவமழை நிறைவு பெறுவதற்கான சூழல் நிலவுவதாகவும் அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வாண்டாவில் நடைபெற்று வரும் ஆர்க்டிக் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் கிரண் ஜார்ஜ், லக்ஷ்யா சென் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் கிரண் ஜார்ஜ் இந்தோனேஷியாவின் **Jonatan Christie**–யையும், லக்ஷ்யா சென், தைவானின் **Tien Chen Chou**-வையும் எதிர்கொள்கின்றனர்.

மகளிர் பிரிவில் **Unnati Hooda, Akarshi Kashyab** இருவரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பங்கேற்கின்றனர்.

மகளிர் இரட்டையர் பிரவில் **Panda** சகோதரிகளும், கலப்பு இரட்டையர் பிரிவில் சதிஷ்குமார் கருணாகரன் - **Aatya Variyath** இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் பங்கேற்கின்றனர்.

**>>>>><<<<<**

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்டி ட்வெண்டி கிரிக்கெட் போட்டியில் பங்ளாதேஷ் இன்று வெஸ்ட் இண்டீஸ் அணியை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**